*ஆய்வுக்கட்டுரை இல: 20*

# யாழ்ப்பாணத்தில் தர்ஹா வழிபாட்டுமுறை–ஒருநோக்கு (தீவகத்தைஅடிப்படையாகக் கொண்டது)

**மங்களரூபி சிவகுமார்**

வரலாற்றுத்துறை, யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்
*mangalarubysivakumar@yahoo.com*

## ஆய்வுச் சுருக்கம்

*மனிதமனங்களை பண்படுத்தும் ஒருகளமாகவே மதங்கள் விளங்குகின்றன என்பது பொதுவான கருத்து. இத்தகைய மதங்களானவை அவரவர் தனிப்பட்ட சுதந்திரத்தின் அடிப்படையில் அமைந்திருந்தாலும் அவை இறைவன் பற்றிக் கூறும் செய்திகள் ஒருமைத்தன்மை உடையனவாகவே காணப்படுகின்றன என்பதில் மாற்றுக்கருத்துக்களுக்கு இடமில்லை. அதேநேரத்தில மதங்களுக்கிடையே காணப்படுகின்ற வழிபாட்டு முறைகளே*

*மதங்களைத் தனித்துவப்படுத்தும் பிரதான அம்சங்களாகத் திகழ்கின்றன என்பதும் உண்மையே. அந்தவகையில் இலங்கையில் காணப்படுகின்ற பிரதான மதங்களிலொன்றான இஸ்லாமியமதமும் ''அல்லாஹ்'' இறைவன் ஒருவனே என்ற ஓரிறைக் கோட்பாட்டை வலியுறுத்துகிறது. இலங்கையில் வாழுகின்ற இஸ்லாமியர்கள் இனத்தாலும் மதத்தாலும் ஒன்றுபட்டு இறுக்கமான இஸ்ஸாமிய மார்க்கங்களைப் பின்பற்றுபவர்களாகவே உள்ளனர். ஆயினும் அவர்கள் பின்பற்றுகின்ற வழிபாட்டுமுறைகளில் பிரதேசத்திற்குப் பிரதேசம் சிற்சில மாற்றங்கள் காணப்படுவதனையும் கூட அவதானிக்க முடிகிறது. இத்தகைய வழிபாட்டுமுறைகளில் தர்ஹா வழிபாட்டு முறையானது குறிப்பிட்டுச் சொல்லக்கூடியதாக உள்ளது. 'ஒலியுல்லாக்கள்' அல்லது 'வலியுல்லாக்கள்' எனப்படுகின்ற இறைநேசர்கள் இறந்ததன் பின்னர் அத்தகைய வலிமார்கள் அடக்கஸ்தலத்துடன் அமைந்த பள்ளிவாசல்கள் பொதுவாக 'தர்ஹாக்கள்' என அழைக்கப்படுகின்றன. அடக்கஸ்தலத்திலிருந்தும், வலிமார்கள் இறந்ததன் பின்னரும் அவர்கள் அற்புதங்களை நிகழ்த்தி மக்களின் குறைகளை தீர்ப்பர் என்ற நம்பிக்கை இஸ்ஸாமியமக்கள் சிலர் மத்தியில் இன்றும் உள்ளது. இத்தகைய தர்ஹா வழிபாட்டுமுறை இலங்கையின் ஒரிருபகுதிகளில் காணப்பட்டாலும்கூட வடகுதியில் அதிலும் தீவகத்தில் மட்டுமே இவ்வழிபாடு காணப்படுகின்றமை இவ்வழிபாட்டு முறையின் சிறப்பம்சமாக உள்ளது. யாழ்ப்பாண மாவட்டத்தில் தர்ஹா அமைப்பு அல்லாத பள்ளிவாசல்களே அதிகளவில் காணப்படுகின்றன. ஆனால் யாழ்ப்பாணத்திலிருந்து ஒருசில கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ள தீவுப்பகுதிகளில் (வேலணை, நயினாதீவு) தர்ஹா வழிபாட்டுமுறை சிறப்பாக உள்ளது. அங்கு ஆண்டுதோறும் ஹந்தூரி (கொடியேற்றம்) விழாக்கள் இடம்பெற்று மக்களுக்கு அன்னதானமும் வழங்கப்படும். இவ்விழாக்களில் இலங்கையின் பல்வேறுபகுதிகளிலுமுள்ள இஸ்ஸாமியமக்கள் மட்டுமன்றி இந்துமதத்தை பின்பற்றுபவர்களும் கலந்துகொள்கின்றமை தீவகத்திலுள்ள தர்ஹா வழிபாட்டுமுறையின் சிறப்பம்சமாகும். இஸ்லாமிய மார்க்கத்தின்படி தர்ஹா வழிபாட்டுமுறை ஓரிறைக் கொள்கைக்கு முரணான வழிபாட்டுமுறை என்ற கருத்து பலராலும் முன்வைக்கப்படுகின்ற சூழ்நிலையில் தம்மை கேரள இஸ்லாமிய வழிவந்தவர்களென அடையாளப்படுத்தும் தீவகத்தில் வாழ்ந்துவருகின்ற இஸ்லாமியர்கள் பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டதொரு வழிபாட்டு முறையாக இம்முறை காணப்படுகின்றது. அவ்வகையில் இவ்வாய்வுக் கட்டுரையானது இஸ்லாமிய மக்களின் மத்தியில் தற்காலத்தில் நாட்டின் பலபகுதிகளிலும் படிப்படியான செல்வாக்கினை இழந்து வருகின்ற தர்ஹா வழிபாட்டு முறையின் சிறப்புக்களையும், அது தற்காலத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள தீவகத்தில் பெற்றுள்ள*

*முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுவதையும், இவ்விடயமாக வருங்காலத்தில் ஆய்வினை மேற்கொள்பவர்களுக்கு ஒரு முன்னோடியான ஆய்வாக அமையவேண்டும் என்ற நம்பிக்கையினையும் நோக்கங்களாகக் கொண்டுள்ளது. இவ்வாய்வானது வரலாற்று அணுகுமுறையின் அடிப்படையில் பண்புசார் முறையில் நோக்கப்படுகின்றது. முதற்தர, இரண்டாந்தர ஆதாரங்கள் ஆய்வின் தேவை கருதிப் பயன்படுத்தப்பட்டுள்ளன. முதற்தர ஆதாரங்களில் அவதானிப்புக்கள் நேர்காணல்கள், வினாக்கொத்துமுறைகள், களஆய்வுகள் என்பன பிரதான இடத்தினை பெற்றுள்ளன. இரண்டாம் நிலை ஆதாரங்களில் நூல்கள், கட்டுரைகள் இணையத்திலிருந்து பெறப்பட்ட தகவல்கள் என்பன அடங்குகின்றன. பொதுப்படையாகப் பார்க்குமிடத்து இத்தகைய தர்ஹா வழிபாட்டு முறையானது தீவகத்திற்கே உரிய இஸ்லாமிய வழிபாட்டுமுறைகளில் சிறப்பானதொரு வழிபாட்டு முறைகளிலொன்றாகத் தற்காலத்திலும் திகழ்ந்து வருவதனை அவதானிக்க முடிகின்றது.*

***திறவுச் சொற்கள்**: தர்ஹா வழிபாட்டுமுறைஇவலிமார்கள்,ஒலியுல்லாக்கள், ஹந்தூரி.*
***அராபியர்களது இலங்கை வருகை.***

**அறிமுகம்**

நாகரிகமற்ற கூட்டத்தினராக வனாந்தரப் பிரதேசங்களில் அலைந்து திரிந்த அராபியர்களுக்கு கி.பி 7ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் முகமதுநபியினால் தோற்றுவிக்கப்பட்டதாகக் கருதப்படுகின்ற இஸ்லாமிய மதமானது அவர்களுக்கு உயரிய நாகரிகத்தினைப் போதித்து அவர்களை ஒழுக்க சீலர்களாக மாற்றியமைத்தது. நபியினது மறைவினைத் தொடர்ந்து தமது கைப்பற்றல்களின் வாயிலாக வணிகத்துடன் கூடவே இஸ்லாமிய மதத்தினையும் அராபியர்கள் தாம் கைப்பற்றிக்கொண்ட பகுதிகளில் பரப்பினர். அராபிய எல்லைகளையும் கடந்து ஐரோப்பாவினையும் கைப்பற்றி 8ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இந்தியாவிற்குள் நுழைந்த இவர்கள் அங்கே இந்து ஆட்சியாளர்களுடைய பலவீனத்தினைப் பயன்படுத்தி வடஇந்தியப் பகுதிக்குள் தமது செல்வாக்கினைச் செலுத்த ஆரம்பித்தனர். தொடர்ந்து தென்னிந்தியாவின் பல பகுதிகளிலும் இவர்களது செயற்பாடுகள் ஆரம்பித்தன.

ஆனால் இலங்கையினைப் பொறுத்து இவர்கள் ஆக்கிரமிப்பாளர்களாக வரவில்லை. இஸ்லாத்தின் தோற்றத்திற்கு முன்னதாக இலங்கையுடன் இவர்கள் தொடர்புகள் கொண்டிருந்தார்களென்ற கருத்துக்கள் பரவலாகக் காணப்பட்டாலும், இத்தகைய தொடர்புகள் இஸ்லாத்தின் தோற்றத்தின் பின்னதாகவே விரிவடைந்ததென்பதே உண்மை. இலங்கையில் இரண்டாவது சிறுபான்மையின மக்களாகக் காணப்படுகின்ற இஸ்லாமிய மக்களை, இங்கு வாழ்கின்ற பிற இனத்தவர்களிலிருந்து அவர்கள் பின்பற்றுகின்ற பண்பாட்டு நடைமுறைகளிலிருந்து இலகுவாக இனங்கண்டுகொள்ள முடியும். அதுவும் குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் பாரம்பரியமாக நீண்டதொரு வரலாற்றினைக் கொண்டு வாழ்ந்து வருகின்ற தமிழ் மக்களுடன் பல்வேறு விடயங்களில் ஒத்தவகையான பண்பாட்டின் தன்மைகளை இஸ்லாமிய மக்கள் உள்வாங்கியிருந்தாலும் அவர்களைத் தனித்து இனங்கண்டுகொள்ள முடியும்.

### இஸ்லாமியர்களின் யாழ்ப்பாண வருகை

இலங்கையில் இஸ்லாமியர்களின் ஆரம்பகால குடியேற்றங்கள் தொடர்பாக முரண்பட்ட கருத்துக்கள் காணப்படுவது போலவே யாழ்ப்பாணத்திலும் இவர்களது ஆரம்பகால குடியேற்றங்கள் தொடர்பாக முரண்பட்ட தகவல்களே காணப்படுகின்றன. அதாவது யாழ்ப்பாணத்தில் இஸ்லாமிய மக்களது ஆரம்பகால குடியேற்றங்கள் தொடர்பாக இத்தகைய கருத்து முரண்பாடுகள் காணப்பட்ட போதும் இத்தகைய கருத்துக்களில் பல கருத்துக்கள் இன்று வலுவிழந்த நிலையில் காணப்படுகின்றன. பொதுப்பட பெருந்தொகையான அராபியர்களின் வருகை இலங்கையில் கி.பி 8ஆம் நூற்றாண்டிலிருந்து இடம்பெற்றது எனக் கொண்டாலும் இவர்களது நிலையான குடியேற்றங்கள் இக்காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் காணப்பட்டதென்பதை நிரூபிப்பதற்கு போதிய சான்றுகளில்லை. யாழ்ப்பாண தமிழ் அரசர்களுடைய காலத்துடன் தான் இவர்களது ஆரம்பகாலக் குடியேற்றங்கள் யாழ்ப்பாணத்தையண்டிய நல்லூர் பிரதேசத்தில் ஏற்பட்டமைக்கு அதிக சான்றுகள் உள்ளன. இக்காலத்தில் தோன்றிய இலக்கியங்கள் மற்றும் போத்துக்கேய ஆவணத்திலிருந்து இவற்றினை தெரிந்து கொள்ளலாம்.

### தீவகம் நோக்கிய இஸ்லாமியர்களது வருகை

யாழ்ப்பாணத்தை நோக்கிய இஸ்லாமியரது வருகை தொடர்பாகவும் அவர்களது குடியிருப்புக்கள் எக்காலப் பகுதியில் தோன்றியது என்பது தொடர்பாகவும் உறுதிப்படக் கூறமுடியாததொரு நிலையே காணப்படுகிறது. இதனைப போன்றே தீவகத்தை நோக்கிய இஸ்லாமியர் வருகை தொடர்பாகவும் அவர்களது ஆரம்பகால குடியேற்றங்கள் தொடர்பாகவும் உறுதிப்படக்கூற முடியவில்லை. தீவகத்துடன் புராதன காலம் முதல் இஸ்லாமியரது வாணிபத் தொடர்புகள் வாணிபத்தைப் பிரதான நோக்காகக் கொண்டு இடம்பெற்றமைக்கான சான்றுகள் ஓரளவு கிடைத்துள்ளன. இருந்தபோதும் இத்தொடர்புகள் அராபியர் என்ற இனத்தின் பெயரில் மேற்கொள்ளப்பட்டதனால் இவர்களை இஸ்லாமியர்கள் என ஏற்றுக்கொள்வதில் முரண்பட்ட நிலை காணப்படுகிறதுதற்காலத்தில் தீவகப்பிராந்தியத்தில் குறிப்பாக நயினாதீவு, வேலணையில் தமது நிரந்தரக் குடியிருப்புகளை அமைத்து வாழும் இஸ்லாமியர்கள் தமது தாய்ப் பிரதேசத்தை அதாவது தாம் காயல்பட்டினத்தைச் சேர்ந்த இஸ்லாமியப் பரம்பரையைச் சேர்ந்தவர்கள் எனத்தம்மை அடையாளப்படுத்துகின்றனர்.

### தீவகத்திலுள்ள தர்ஹா வழிபாட்டுமுறை

யாழ்ப்பாணக் குடாநாடு தனித்துவமானதொரு புவியியல் பிரதேசமாகக் காணப்படினும் அதனுள் அமைந்துள்ள தீவகப்பிரதேசம் தனக்கென ஒரு தனித்துவமான புவியியல் அம்சங்களை கொண்டுள்ளது. யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கும் தீவகப் பிராந்தியத்திற்குமிடையே சில கிலோமீற்றர் தூரம்தான் காணப்படுகின்றபோதும் இரண்டு பிராந்திய மக்களது சமய சமூக பொருளாதார பண்பாட்டு அம்சங்களுக்கிடையேயும் பல வேறுபாடுகள் காணப்படவே செய்கின்றன. மத ரீதியாக இஸ்லாமிய சமயத்தனையும் இவர்கள் பின்பற்றுகின்றனர்.

தீவகத்திலுள்ள இஸ்லாமியர்களது சமய வழிபாட்டு முறைகள் யாழ்ப்பாணத்திலுள்ள இஸ்லாமிய மக்களது சமய வழிபாட்டு முறைகளுடன் ஒப்பிடுகின்றபோது பாரிய வேறுபாடுகளைக் கொண்டுள்ளன. யாழ்ப்பாணத்தில் சியாரத்துடன் அமைந்த தர்ஹா அமைப்பினை ஒத்த பள்ளிவாசல்கள் எதுவுமேயில்லை. ஆனால் இம்முறை தீவகத்திற்கு மட்டுமே உள்ள சிறப்பம்சமாகும். இலங்கையின் சில பகுதிகளில் இவ் வழிபாட்டு முறை காணப்படுகின்ற போதும் யாழ்ப்பாணத்தில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. இருப்பினும் இவர்களது இத்தகைய வழிபாட்டுமுறையினை யாழ்ப்பாணத்திலுள்ள இஸ்லாமியர்கள் குறைகூறுவதனைக் காணலாம்.

தீவகத்திலுள்ள பள்ளிவாசல்களில் பெரும்பாலானவை சியாறங்களாகவே உள்ளன. சியாறம் என்பதன் பொருள் சமாதி என்பதாகும். நபிகள் நாயகத்தினது காலத்திலும் சமயப் பிரச்சாரம் மேற்கொள்ளவெனவரும் குருமார்கள் அல்லது நல்லடியார்கள் பல்வேறு விதமான அதிசயம்மிக்க செயல்களை செய்து காட்டும் சக்தி மிக்கவர்களாகத் திகழ்ந்தனர். இவ்வாறான அதிசயச் செயல்களை செய்யும் நல்லடியார்கள் இறக்கின்ற சந்தர்ப்பங்களில் அவர்களது உடல்களை அடக்கம் செய்து சமாதிகள் கட்டப்படும். அச்சமாதிகளை உள்ளடக்கிய பள்ளிவாசல் அமைப்பே சிறப்பாக சியாறம் என அழைக்கப்படுகிறது *(இன்குலாப்,சா.,2009,ப.355-356).*

யாழ்ப்பாணக் குடாநாட்டின் எல்லையுள் இஸ்லாமியரது சியாறங்கள் எதுவுமேயில்லை. வேலணைத்தீவிலுள்ள மண்கும்பான் வெள்ளைக் கடற்கரை பள்ளிவாசல் மிகப்பழமையான சியாரம் கொண்டதொரு பள்ளிவாசலாகும். இதற்கு அருகிலுள்ள பிறிதொரு மசூதியான குருபாவா முகைதீன் (ஆராயலையனநநெ) பள்ளிவாசல் இத்தகையதொரு அமைப்பாகவே உள்ளது. இவ் இரு பள்ளிகளும் தர்ஹா அமைப்பை ஒத்த பள்ளிவாசல்களாகவே உள்ளன. நயினாதீவுப் பள்ளிவாசல் ஏனைய இஸ்லாமிய பள்ளிவாசல்களை போன்றதொரு அமைப்பாக உள்ளபோதும் பள்ளிவாசலுக்கு அப்பால் சற்றுத் தொலைவில் ஒரு சமாதி உள்ளமை குறிப்பிடத்தக்கது. இச் சியாரங்கள் கடற்கரையை அண்டி இருப்பது இந்த வழிபாடு தமிழ் நாட்டிலிருந்து வந்தது என்பதை குறித்து நிற்பதுடன் இம் மக்களது காயல்பட்டின தொடர்பை ஞாபகப்படுத்துவதாகவும் அமைகின்றது.

**ஹந்தூரி – கொடியேற்றல்**

யாழ்ப்பாணத்திலுள்ள இஸ்லாமிய சமூகத்தவரைத் தீவக இஸ்லாமிய சமூகத்திலிருந்து வேறுபடுத்தும் மிகப்பிரதான சமயவேறுபாடு இதுவாகும். தீவகத்திலுள்ள பள்ளிவாசல்கள் தர்ஹா அமைப்பை ஒத்ததாக இருப்பதனால் அதனுள் அடக்கப்பட்டுள்ள இறை நேசனின் நினைவு நாளினை ஹந்தூரி எனச் சிறப்பாக அழைப்பர். ஹந்தூரி விழா 10 நாட்கள் வரை இடம்பெறுகிறது. இவ்விழாவின் தொடக்க நாள் முதல் இறுதிநாள் வரை பல்வேறு நிகழ்வுகள் இடம்பெறுகின்றன.

தர்ஹாவில் நடைபெறும் ஹந்தூரி விழாவின் தொடக்க நாளில் கொடியேற்றுதல் நடைபெறுகிறது. இதன்போது பச்சை நிறத்துணியில் வெள்ளை நிற நட்சத்திரம், பிறை,

இஸ்லாமிய எழுத்துக்கள், சியாறத்தினுள் அடக்கப்பட்டுள்ள வலிமாரது பெயர் என்பன அமைந்த கொடியொன்று ஏற்றப்படுகிறது. இறைநேசனை கண்ணியப்படுத்தும் விதமாகவே இக்கொடியேற்றம் இடம்பெறுகின்றது. தீவகத்திற்கான தனிப்பட்ட அடையாளக் குறியீடாகவும் இக்கொடியேற்றம் காணப்படுகிறது. கொடியேற்றத்திலிருந்து பத்து நாட்கள் தொடர்ந்து பல்வேறு சடங்கு முறைகள் பின்பற்றப்படுகின்றன. கொடியேறற் நிகழ்வானது பகல் வேளைகளில் இடம்பெறுவதோடு நிகழ்விற்கெனப் பிரத்தியோகமாக மௌலவிமாரும் வரவழைக்கப்படுவர்(நேர்காணல் நயினா முகமட்இ பள்ளிவாசல் உபதலைவர் இ29.04.2014)

திருவிழா முடிவடைந்ததும் பத்தாம்நாள் கொடி இறக்கும் நிகழ்வு இடம்பெறும். இந்நிகழ்வினைத் தரிசிக்கும் நோக்குடன் இலங்கையின் ஏனைய பகுதிகளைச் சேர்ந்த இஸ்லாமியர்கள் இந்நிகழ்வில் பங்குபற்றுவதோடு தீவகத்திலுள்ள மக்களும் இதில் கலந்து கொள்கின்றனர். ஏற்றப்பட்ட கொடி இறக்கப்பட்டதும் ஹந்தூாி உணவு வழங்கப்படும். இவ் உணவானது மாமிசம், மரக்கறி வகைகள் சேர்ந்த உணவாக இருக்கும். இவ் உணவினை பாரம்பரிய முறைப்படி பனை ஓலையில் செய்யப்பட்ட பிலாவிலே வைத்து வழங்கும் முறை காணப்படுகிறது. இதற்கான பிலாவினை தீவகத்திலுள்ள இந்துக்களே செய்து கொடுக்கின்றமை குறிப்பிடத்தக்கது. ˙(நேர்காணல் நயினா முகமட்இ பள்ளிவாசல் உபதலைவர் இ29.04.2014) திருவிழா இடம்பெறும் பத்து நாட்களும் மாலை வேளையில் சியாரத்தினுள் அடக்கப்பட்டுள்ள வலிமாரை புகழ்ந்து பாடல்கள் பாடுவது வழக்கமாக உள்ளது.

யாழ்ப்பாணத்திலுள்ள பள்ளிவாசல்களுக்கு நேர் எதிரானதாக தர்ஹா அமைப்பினை ஒத்த தீவக பள்ளிவாசல்கள் காணப்படுகிறது. இது வலிமார்களின் அடக்கஸ்தலம். எவரும் வழிநடத்தாமல் அவரவர் விருப்பம் போல வழிபாடுகள் நடைபெறும். பிற சமயத்தவரும், பெண்களும் வருவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள நிலையினை தீவகத்தில் காணலாம். தர்ஹாவில் அடக்கம் செய்யப்பட்டுள்ள அவுலியாக்களுக்கு நேர்த்திக்கடன், பலியிடுதல் முதலானவை மேற்கொள்ளப்படுகின்றன. தீவகத்தில் தர்ஹா வழிபாட்டினை மேற்கொள்வோர் அடக்கமாயிருக்கும் வலிமார்கள் அற்புதங்கள் செய்யும் சக்தி படைத்தவர்கள் என்று அதிகமாக நம்புகிறார்கள்.

ஏனைய இஸ்லாமிய மக்கள் மத்தியில் காணப்படும் நம்பிக்கைகள் பற்றிய எண்ணங்களைப் போலன்றித் தீவக இஸ்லாமியர்கள் மத்தியில் அதிக நம்பிக்கைகள் காணப்படுகின்றன. நூல், வளையம் என்பன கட்டுதல், தாயத்துக் கட்டல், மந்திரித்தல், சூனியம் போன்றவற்றில் நம்பிக்கை, சாஸ்திரம் பார்த்தல் நேர்த்தி வைத்தல் என்பன இஸ்லாமிய மார்க்கப்படி தவறான செயல் என்று கருதப்படுகின்றபோதும் தீவக இஸ்லாமியர் மத்தியில் இந்நம்பிக்கைகள் பரவலாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. திருமணம் முடித்தால் திருமணம் நிகழ்ந்த நாளுக்கு அடுத்த நாள் சியாரத்தை நாடவேண்டும். இல்லையேல் தெய்வக்குற்றம் ஆகிவிடும் என்ற நம்பிக்கை நிலவுகிறது. இவ்வாறு சியாரத்தை தரிசிக்கச் செல்லும்போது ஒரு தட்டில் பேரீச்சம்பழம், கற்கண்டு மற்றும் தம்மால் இயன்ற பணத்தினை

வைத்து மௌலவிக்கு தானமாக வழங்கும் முறையும் உள்ளது(நேர்காணல் உதுமான் முஹமது முகைதீனஇ (முன்னால் பள்ளிவாசல் தலைவாஇ29.04.2014).

தீர்க்க முடியாத நோய்கள் ஏற்படுகின்றபோது சியாரத்திற்கு வந்து நேர்த்தி வைக்கும் முறை காணப்படுவதோடு, சியாரத்தில் ஏற்றப்பட்டுள்ள குத்துவிளக்கில் உள்ள எண்ணையினை நோய் வந்த இடத்தில் தடவும் முறையும் காணப்படுகிறது. வலிமார்கள் வாழும் காலத்தில் நோய்களைத் தீர்க்கும் பொருட்டு பயன்படுத்திய தடி போன்ற பொருட்களினால் தலையில் மூன்று முறை அடிக்கும் வழக்கம் காணப்படுகிறது. இவர்கள் இறந்த பின்னரும் அவர்கள் பயன்படுத்திய தடியினால் தாமே தலையில் அடிக்கும் வழக்கம் இன்றும் உள்ளது.

நோய்கள் ஏற்ப்படுகின்றபோது பள்ளிவாசல் மௌலவியினால் குர்ரான் ஓதிய பின்னர் தண்ணீர் வழங்கும் முறை காணப்படுகிறது. இதனால் முகம், கைகால்களை 3 முறை கழுவும் வழக்கமும் உள்ளது. இத் தண்ணீரினைவிட்டு மூலைகளில் தட்டிவிடும் வழக்கமும் உள்ளது. இதனால் துஷ்ட ஆவிகள், நோய்கள், கஸ்டங்கள் என்பன தம்மை நெருங்காது என்ற நம்பிக்கை காணப்படுகிறது. இந்துக்களும் இம்முறையினைப் பின்பற்றுவதனைக் காணலாம். தமக்கு ஏற்படும் துன்பங்களை நீக்கும் பொருட்டும் தாயத்துக்கள் அணியும் வழக்கமும் உள்ளது. திருக்குர்ரான் எழுத்துக்களை செப்புதகத்தட்டில் எழுதி அட்சரக்கூட்டினுள் இட்டு இடுப்பில் அல்லது கைகளில் கட்டும் வழக்கமும் உள்ளது (நேர்காணல் முஹமது முகைதீன் அபுஜிஹாத்இ (ஆசிரியர்)இ29.'.04.'.2014)

மந்திரித்தல், சூனியம் செய்தல், வசியம் செய்தல் போன்ற பிரச்சினைகளிலிருந்து பாதுகாக்கும் பொருட்டு சியாரத்துக்கு பாதிக்கப்பட்டவரை அழைத்து வந்து குர்ரான் ஓதி மந்திரிக்கும்முறை காணப்படுகிறது. இந்நம்பிக்கை இந்துக்கள் மத்தியிலே அதிகமாக காணப்படுவதோடு அவர்கள் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் இங்கு வருகை தருவதைக் காணலாம். மேலும் இங்கு மந்திரித்த தாயத்துக்கள், மந்திரித்த தகடுகள் (இயந்திரங்கள்) வழங்குவதை அவதானிகக் முடிகின்றது.

தம்மால் முன்வைக்கப்படுகின்ற நேர்த்திகள் நிறைவேறினால் அதற்கான பரிகாரங்களை தவறாது நிறைவேற்றுவதை காணலாம். அவ்வாறு செய்யாவிட்டால் துன்பம் நேரும் என்ற நம்பிக்கையும் இவர்களிடையிலே காணப்படுகிறது. இதன் பொருட்டு குடும்பத்தினருடன் பள்ளிவாசலில் சமைத்து அனைவருக்கும் உணவளிக்கும் முறை பரவலாக உள்ளது. மதத்தாலும் இனத்தாலும் இஸ்லாமியர்களாகவே விளங்கும் இவர்களது வழிபாட்டு முறைகளிலே மாறுதல்கள் காணப்பட தர்ஹா அமைப்பை ஒத்த வழிபாட்டு முறை காணப்படுவதே பிரதான காரணமாகும். இஸ்லாமிய மார்க்கத்தினை சார்ந்த அனைத்து இஸ்லாமியர்களாலும் கடைப்பிடிக்கப்படும் ஈதுல்பிதர் (நோன்புப் பெருநாள்) ஈதுல் அல்ஹா

(ஹஜ்ஜீப் பெருநாள்) மீலாது நபிகள் பிறந்த தினம் என்பன தீவக இஸ்லாமிய மக்களாலும் கொண்டாடப்படுகிறது.

**முடிவுரை**

தற்போதுள்ள சூழலில் தர்ஹா வழிபாடு சிறுதெய்வ வழிபாட்டுக்கு இணையாகக் கருதப்படுவதால் பலராலும் அவ்வழிபாடு விமர்சனம் செய்யப்படுகிறது. காணிக்கை நேர்தல், பலியிடுதல், வலிமார்களின் சமாதியை வலம்வருதல், கொடி கட்டுதல், முதலானவை இந்து சமயத்தின் தாக்கத்தால் ஏற்பட்டவை எனக்கூறி அவை இஸ்லாத்திற்கு விரோதமானவை என்றும் குறிப்பாக ஓரிறைக் கொள்கைக்கு அவை மாறானவை என்றும் கருத்துத் தெரிவிக்கின்றனர். தீவகத்திலே நிலவும் இந்த தர்ஹா முறையானது தீவகப் பிராந்தியத்தில் இந்து – முஸ்லிம் இரு சமயத்தாரிடையே ஒற்றுமை நிலவ அவசியமான காரணியாகின்றது. இவ்வழிபாட்டுமுறையானது மாற்றுச் சமயத்தவரைக் கவரும் வகையில் அமைந்துள்ளதால் சில பண்பாட்டுக் கூறுகளையும் ஏற்றுத் தீவக மக்கள் மத்தியில் கூட்டுணர்வு மத நல்லிணக்கம் முதலானவற்றை ஏற்படுத்த துணை புரிகின்றதெனலாம்.

**அடிக்குறிப்புக்கள்**


i. அப்துல்ரஹீம், எம்,எஸ்., 1979, யாழ்ப்பாண முஸ்லீம் வரலாறும் பண்பாடும், நாமகள் அச்சகம்.

ii. அமீன்,எம்,ஐ.எம்., 1996, இஸ்லாமிய நாகரிகம், இஸ்லாமிய புக் ஹவுஸ்.

iii. அனஸ்,எம்,எஸ்,எம்., 1997, இஸ்லாத்தில் தோற்றம் ஒரு சமூக பண்பாட்டியல் ஆய்வு, பண்பாட்டு ஆய்வு வட்டம் பேராதனை.

iv. இத்ரீஸ்,ஏ,பி,எம்., 2011, சோனகதேசம் மிகச் சுருக்கமான அறிமுகம், சோனகம் வெளியீடு.

v. அப்துல் அஸீஸ்,எல்,எம்., 1907, இலங்கை சோனக இன வரலாறு, சோனக இஸ்லாமிய காலச்சார நிலையம்.

vi. Anuzsisya, S., 2001, The Early Setlentement of Muslims in Srilanka, Sri Lanka South Eastern.

vii. Mehta,J,L., 2009, Advanced Study in the History of Medieval India, Vol. III New Delhi Sterling Publishers P.V.T.Ltd.

viii. Silva,K,M,de., 1981, History of Sri Lanka New Delhi Oxford University Press.